**Election immediate**

**To**
**The State Election Officers**

**Rc.No. 251/2013/CE-5 (2)** **Dated:08.04.2013**

Sir,

Sub : Election – Conduct of Election of Members to the Boards and Office Bearers of Co-operative Societies - Counting of Votes – Guidelines – Regarding.

*****

The counting of votes is to be done for the 1st phase on 9.4.2013.

Counting, on the basis of which the election results are decided, is the crucial part of the election process and any commission, omission, negligence,non-adherence to rules on the part of the Election Officer will have an adverse effect on the outcome of the election and thus on the image of the Commission.

The Commission therefore wants to ensure that strict observance of rules, regulation, and discipline should be enforced in the matter of counting and declaration of results.

And towards this direction, the Commission reiterates, that the officer involved in the counting process should thoroughly get acquainted himself to the contents of the 'Hand Book' already brought out by the Commission and act accordingly (pages 26 to 29 paras 3.6.1 to 3.7.4. Extract enclosed for ready reference).

It may be noted that any failure on the part of the concerned officer has to be viewed very seriously and appropriate disciplinary action has to be initiated immediately, under intimation to the Commission.

**(Sd../-)M.R. Mohan**
**Commissioner**

Copy to

All Observers,

All District Election Officers.

## 3.6 வாக்கு எண்ணிக்கை (Counting):

**3.6.1.** அதற்கென அறிவிக்கப்பட்ட நாள், நேரம் மற்றும் இடத்தில் வாக்கு எண்ணிக்கை நடைபெறுதல் வேண்டும். (விதி 52 (14) (a))

**3.6.2.** ஒவ்வொரு வேட்பாளர், அவரது ஒரு தேர்தல் முகவர், அவருக்கென தேர்தல் அலுவலரால் நிர்ணயிக்கப்படும் எண்ணிக்கையில் அவரது வாக்கு எண்ணிக்கை முகவர்கள் (counting agents) ஆகியோர் வாக்கு எண்ணிக்கை நடைபெறும் போது உடனிருக்க உரிமை பெற்றவராவார். தேர்தல் தொடர்பாக ஏற்கனவே பணியில் இருப்போர் மற்றும் வாக்கு எண்ணிக்கைக்கு உதவிட தேர்தல் அலுவலரால் நியமனம் செய்யப்பட்டவர் தவிர வேறு எந்த ஒரு நபரும் வாக்கு எண்ணிக்கையின்போது இருக்க அனுமதிக்கக் கூடாது.

(விதி 52 (14) (b))

**3.6.3.** தேர்தல் அலுவலர் வாக்குப் பெட்டியை அங்கு இருக்கும் வேட்பாளர்கள், அவர்களது தேர்தல் மற்றும் ஓட்டு எண்ணிக்கை முகவர்கள் முன்பாக திறக்க வேண்டும். தேர்தல் அலுவராலோ அல்லது அவரது மேற்பார்வையிலோ வாக்குகள் எண்ணப்பட வேண்டும்.

(விதி 52 (14) (c))

**3.6.4.** ஒரு ஓட்டுச் சீட்டு கீழ்வரும் இனங்களில் நிராகரிக்கப்பட வேண்டும். (Reject).

(1) வாக்காளர் அடையாளம் தெரியும் வகையில் ஏதாவது குறியீடு அல்லது எழுத்து காணப்படுதல் ;'
(2) அதில் வாக்கு ஏதும் பதிவு செய்யப்படாதது ;
(3) தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய வேட்பாளர்களின் எண்ணிக்கையை விட அதிக வேட்பாளர்களுக்கு வாக்களிக்கப்பட்டிருத்தல் ;
(4) தேர்தல் அலுவலராலோ, வாக்குச் சாவடி அலுவலராலோ வழங்கப்படாத வேறு ஒரு வாக்குச் சீட்டு ;
(5) எந்த வேட்பாளருக்கு வாக்களிக்கப்பட்டுள்ளது என்று சந்தேகம் தரும் முறையில் முத்திரையிடப்பட்டுள்ளது ;
(6) தேர்தல் அலுவலரின் முத்திரையுடன் கூடிய கையொப்பம் இல்லாதது ;
(7) உண்மையான (genuine) வாக்குச் சீட்டுதானா என்று அறிய முடியாத அளவிற்கு சிதைந்தோ, சேதமடைந்தோ இருத்தல் ;
(8) தொடர்புடைய (relevant) வாக்குச் சீட்டாக இல்லாதது.

**3.6.5** மேலே இனம் (7)ல் சொல்லப்பட்ட குறையானது தேர்தல் அலுவலர் அல்லது வாக்குச் சாவடி அலுவலர் ஆகியோரின் தவறுதலினாலோ (mistake) அல்லது விடுதலினாலோ (failure) ஏற்பட்டுள்ளது என்று தேர்தல் அலுவலர் கருதும் நிலையில் (satisfy) அக்காரணம் பற்றி மட்டும் அந்த வாக்குச் சீட்டினை நிராகரித்தல் கூடாது.

**3.6.6** வாக்குச் சீட்டில், குறிப்பிட்ட வேட்பாளருக்குத்தான் வாக்காளர் வாக்களிக்க விருப்பப்பட்டுள்ளார் என்பது தெளிவாக அறியக்கூடிய நிலையில், அவரது முத்திரை (mark) தெளிவாக இல்லை மற்றும் ஒரு தடவைக்கு மேல் முத்திரை இடப்பட்டுள்ளது என்ற காரணங்களினால் மட்டும் அந்த வாக்குச் சீட்டினை நிராகரித்தல் கூடாது.

(விதி 52 (15) (a))

**3.6.7** தேர்தல் அலுவலர் மட்டுமே வாக்குச் சீட்டினை நிராகரிக்கும் அதிகாரம் பெற்றவராவார். (விதி 52 (15) (b))

**3.6.8** வாக்குச் சாவடியில் பயன்படுத்தப்பட்ட, வாக்குப் பெட்டியிலிருந்து எடுக்கப்பட்ட, வாக்குச் சீட்டுகளில், விதியின் கீழ் நிராகரிக்கப்பட்டவை (rejected) தனிக் கட்டாக (bundle) வைக்க வேண்டும்.

(விதி 52 (15) (c)).

**3.6.9** நிராகரிக்கப்பட்ட வாக்குச் சீட்டுகள் தவிர்த்த மற்ற வாக்குச் சீட்டுகளில் பதிவாகி உள்ள அனைத்து வாக்குகளையும் எண்ண வேண்டும். தேர்தல் அலுவலர் கூடுமானவரை ஓட்டு எண்ணிக்கையினை தொடர்ச்சியாக (continuous) மேற்கொள்ள வேண்டும். எண்ணிக்கை நிறுத்தப்பட வேண்டி இருக்கும் தருணத்தில் (suspended) ஏற்படும் இடைவெளியில், வாக்குச் சீட்டுகள், கட்டுகள் (pockets) மற்றும் தேர்தல் தொடர்பான அனைத்து ஆவணங்கள் (papers) ஆகியவற்றை, தேர்தல் அலுவலர், விருப்பப்படும் வேட்பாளர்கள் அல்லது அவர்கள் தேர்தல் முகவர்கள் ஆகியோரது முத்திரையுடன் தனது முத்திரையினையும் இட்டு, போதுமான பாதுகாப்புடன் வைத்திருக்க வேண்டும்.

3.7. முடிவு அறிவித்தல்

**3.7.1.** வாக்கு எண்ணிக்கை முடிவுற்ற உடன், ஒவ்வொரு வாக்காளரும் பெற்றுள்ள செல்லத்தக்க (valid) வாக்குகளை தெரிவித்து (announce), செல்லத்தக்க வாக்குகளை அதிக எண்ணிக்கையில் (largest number) பெற்றுள்ள வேட்பாளரைத் தேர்வு பெற்றவராக அறிவிக்க (declare as elected) வேண்டும். சம எண்ணிக்கையில் வாக்குகள் உள்ள நேர்வில், தேர்தல் அலுவலர் குலுக்கல் முறையில் (casting lots) தேர்தல் முடிவினை தீர்மானிக்க (decide) வேண்டும்.

(விதி 52 (16) .

**3.7.2.** தேர்தல் அலுவலர், இதற்கென தனியான ஓர் பதிவேட்டில் தேர்தல் முடிவுகளை பதிவு செய்து கையொப்பமிடல் வேண்டும்.

(விதி 52 (17) (a)

**3.7.3.** முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட வேட்பாளர்களின் பெயர்கள் சங்க அலுவலகத்தின் அறிவிப்பு பலகையில் அல்லது தேர்தல் அலுவலரால் தெரிவிக்கப்படும் (specify) இடத்தில் வெளியிடப்பட வேண்டும்.

(விதி 52 (17) (b))

**3.7.4.** தேர்தல் முடிவு பெற்ற உடன், தேர்தல் அலுவலர், படிவம் 22–ல், தேர்தல் முடிவுகளை, சங்கத்திற்கும், தேர்தல் ஆணையம், மாநில தேர்தல் அலுவலர், மாவட்ட தேர்தல் அலுவலர், மற்றும் விதி 53(1)–ன் கீழ் தேர்தல் அலுவலர் நியமிக்கப்பட்டிருந்தால் அத்தேர்தல் அலுவலர் ஆகியோருக்கும் அனுப்ப வேண்டும்.

(விதி 52 (17) (c).

ஒம்./- xxx
ஆணையர்